திருக்குறுங்குடி

# அழகியநம்பி யுலா

சென்னை யூனிவர்ஸிட்டி

தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர்

**S. வையாபுரிப் பிள்ளை, B. A. B. L.,**

பரிசோதித்து வெளியிட்டது.

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை.

1932

ஸ்ரீ:

# திருக்குறுங்குடி

# அழகியநம்பி யுலா

## காப்பு

பூமாலை சேர்குறுங்கைப் பொன்மேனி நம்பியெங்கள்
மாமால் பவனியுலா மாலைக்கு—நாமேவு
பூவற் கருடனே பொன்னுலகத் தார்பரவுங்
காவற் கருடனே காப்பு.

## நூல்

**கா**ர்கொண்ட மேனியான் கைகொண்ட நேமியான்
பார்கொண்ட பாதப் பரந்தாமன்—சீர்கொண்ட
பூமகளும் பார்மகளும் போற்றியிரு பாலிருப்ப
மாமலரோன் கைகுவித்து வந்திப்ப—நேமியுடன்
சங்கமுத லைம்படையுந் தானிலங்கப் புள்ளரசு
புங்கவனுஞ் சேனையர்கோன் போற்றிசைப்ப—எங்குநி
தேவர் குழாம்நெருங்கிச் சேவிப்பச் செங்கமலப் [றை
பூவலரும் நீலவரை போலவே—யாவருக்கு
5. மிஞ்சிய வைகுண்ட [1]வீட்டிருக்கும் நாளவுணன்
நெஞ்சிற் செறுவம் நிறுத்தவெண்ணிக்—கொஞ்சவுரு
வாமனமாய் வேள்விபுரி மண்டபத்திற் சென்றிரந்து
தாமனதால் மூவடிமண் தாவென்ன—ஓமெனவே
வெள்ளி தடுப்ப விழியொன்று போக்கிமுன்னே
யள்ளியநீர் கையேற்ற வந்நாளில்—உள்ளமகிழ்ந்

(பி - ம்)— [1]வீட்டிருக்க.

தோரடியிற் கீழே [1]ழுலகளந்து மேல்நின்ற
வோரடியில் மேலே [2]ழுலகளந்தும்—ஓரடிக்கும்
எங்கே யிடமென் றெதிர்மா வலிசிரசிற்
பங்கே ருகப்பொற் பதம்வைத்தே—துங்கத்
திரிவிக் கிரமத் திருவவதா ரஞ்செய்
தருள்முக் கியதலமென் றூரும்—பரவரிய
வாமனச் சேத்ரமென வாழுங் குறுங்குடியான்
தேமருவு சித்தாச் சிரமத்தான்—மாமறையோர்
கோர முகத்திற் குறுங்கன் பிறந்திந்தத்
தாரணியிற் றீதிழைக்கத் தான்கண்டே—நேரெதிர்ந்து
[3]வென்றுதிரு வைகுண்டம் வீற்றிருந்த கோலமும்பொற்
குன்று தனில்நின்ற கோலமும்பால்—துன்றுகடற்
பள்ளிகொண்ட கோலமும்பண் பாய்ச்சேவை சாதித்து
விள்ளுமவ னாமம் விளங்குமூர்—உள்ளமகிழ்
கோடிமகா தீர்த்தங் குலவுதல மென்றுவிண்ணோர்
நாடியிறைஞ் சுங்குறுங்கை நன்னகரான்—வீடுபெற
நேசித் தலர்சொரிந்து நின்றெழுபத் தெண்பிரமர்
பூசித் தினிதேத்தும் பொற்பதத்தான்—தேசிகமாஞ்
செக்கச் சிவந்த செழுஞ்சுடரைப் பேதமறப்
பக்கத்தில் வைத்த பரிவினான்—மிக்கதமிழ்ச்
சீரன் புறவே தெரிந்துபா டும்பறைச்சிக்
காரங் கொடுத்தருளு மன்பினான்—நாரதனார்
நன்றுதரு மெஞ்ஞான்றும் ஞானம் விளங்குமென
நின்று தவம்புரிய நேசித்தோன்—வென்றிதரு
மாக்களிற்று வேந்தன் மனப்பூ ரணமாக
நாக்கறுக்க வுண்மையாய் நாக்களித்தோன்—ஆக்கமது
மிச்ச நமக்குக்கீழ் வீட்டுவர மங்கையெனப்
பிச்சனுக்குப் பேறுதவும் பெற்றியான்—இச்செகத்தில்
வந்தித்த காரி மதலை யெனப்புளிக்கீழ்ச்
[4]சந்தத்து வேதந் தமிழ்செய்தோன்—சிந்திக்குந்
தெற்குவீ டென்று திருமங்கை மன்னன்வர
நற்கதியன் றீந்தருளும் நம்பெருமாள்—சொற்கிசைந்த

---

(பி - ம்)— [1]வுலகளந்து. [2]வுலகளந்தும். [3]வென்றிதரு. [4]சந்தித்த.

பாடற் குருகிப் பரவு மரையர்துழாய
மாடத்திற் போயிருந்த வாரத்தான்—நாடிக்
குழனூர் கழனிக் [1]குளத்திற் றிருவாய்
மொழியா லடகுகொய்த மூர்த்தி—வழுவால்
வருராக் கதனும் மதங்கனும்வீ டெய்தக்
கருணை கடாட்சமருள் கண்ணன்—அருள்கூரும்
எம்பெருமா னார்சீட னென்னச்சோ [2]மன்றுவைத்த
நம்பெருமா னாயிர நாமத்தான்—தம்பமினி
யாரெனக்கு நானுன் னடைக்கலமென் றேயிறைஞ்சுஞ்
சேரனுக்குப் பிள்ளையாய்ச் சென்மித்தோன்—வார்புன [விற்
காரண்ட மூழ்கிக் கரும்பனையைச் சுற்றிவரப்
பேரண்ட வீடளித்த பெற்றியான்—சீர்தங்கு
பிள்ளைதர [3]வேணுமென்றே பேராசை யாற்றவஞ்செய்
வள்ளமுலைப் பாடக வல்லிபால்—உள்ளறிவாய்ச்
சென்மித்துத் திக்கனைத்துஞ் சென்றரா மேசுரத்திற்
றன்மத்தால் செப்பேடு தான்கண்டே—நன்மைபெறுஞ்
சீவல மாறனுக்குச் சித்தமகிழ்ந் தேயருள்செய்
காவலவன் செங்கமலக் கண்ணினன்—மேவு
முறைகேத் திரபால மூர்த்தி வடகீழ்
[4]புறமேவ வன்பு புரிந்தோன்—நிறமான
பச்சைப் பரியேறிப் பாரறியச் சேரனுக்காய்
[5]மெய்ச்சப் படைவெட்டும் வீரத்தான்—உச்சிதமாம்
நீல வரையருவி நேராகச் செவ்வந்தி
மாலை புனையு மணிப்புயத்தான்—சால
மழைதடுத்து முன்னாள் வசந்தன்கொண் டாடுங்
குழகனம்பி ராயனெங்கள் கோமான்—விழைவாகத்
தேசிக விலாசச் சிகரந் தெரிசித்த
கோசிகனுக் கன்பு கொடுத்தபிரான்—வீசலைசூழ்
பாருண் [6]டுமிழ்ந்தளந்து பன்றியாய்க் கீண்டெடுத்த
நீருண்ட மேக நிறத்தினன்—பேரண்ட

(பி - ம்)— [1]குழத்தித் திருவாய். [2]மன்றோய்த்த. [3]வேணு மென்று. [4]புறமேவியன்பு. [5]மெச்சு. [6]டுமிழ்ந்தமர்ந்து.

அண்டமு மண்டத் தலகி லுயி ரும்படைக்கப்
பண்டயனை யீன்ற பரந்தாமன்—விண்ட
40. முதலை [1]நிருதன் முனியை யடர்ந்து
மதலை மதலையாய் வந்தோன்—இதமுடனே
அன்றெதிர்ந்த தாடகையை யாதி யிராவணனை
வென்று செயங்கொண்ட வீரத்தான்—துன்று
மருது சகடு வளர்தொட்டிற் பேய்ச்சி
யெருது குதிரை யிளங்கன்—றுருகியபுள்
ளானை முதல்மல்ல ராவியுண்டு கஞ்சனையும்
வானி லனுப்பு மருகனார்—ஆனிரைக்காய்க் [குள்
குன்றெடுத்து மாய்ச்சியர்கள் கூறையெடுத் தும்மனைக்
சென்றெடுத்து வெண்ணெய் திருடியும்—அன்றெடுத்த
45. தாம்போ டசோதைமுன்னே தாழ்ந்துநின்றோன் தாம
பாம்போடுமாடும்பரதத்தான்—மேம்பாடித் [ரைத்தாள்
தென்றுபதி னாறு யிரங்கோ பியர்மகிழ
மன்றல் புரிந்தருளு மாயத்தான்—வென்றிபுனை
ஐவருக்குத் தூதுரைத்தும் அர்ச்சுனற்குத் தேரூர்ந்தும்
தையலுக்குத் தானை தனைக்காத்தும்—செய்ய
பகலில் இரவழைத்தும் பாரதப்போர் மூட்டிச்
செகமகிழப் பூபாரந் தீர்த்தோன்—இகழ்வான
வாணன் கரமறுத்தோன் வானோர் [2]பணிந்தேத்தும்
சேணிந் திரற்கிளைய செங்கண்மால்—காணும்
50. மதுகை டபர்ச்செற்றோன் மாமதவா னைக்காய்
முதலை தனையடர்ந்த மூர்த்தி—முதியதிரைப்
பாலுததி யிற்பகுவாய்ப் பாம்பிற் பசுத்துரத்துங்
கோவிலா விற்றுயிலுங் கோவிந்தன்—மேலடியார்
தன்னெஞ்சம் வைகுந்தத் தானமுந் தாழ்ந்திறைஞ்சும்
என்னெஞ்சம் நீங்கா தினிதிருந்தோன்—முன்னமொரு
மாவானை முன்னு மதுரத் தமிழ்பாடு
நாவாணன் பின்னும் நடந்தபிரான்—தேவான
ஈசனார் பக்கத்தும் ஏத்துமறை யுச்சியினும்
நேசமா யெப்போதும் நின்றமால்—காசினியாந்

(பி - ம்)— [1]கிருதன். [2]பரிந்தேத்தும்.

தான மடிதீண்டத் தாரகைக்கு மேலான
வானமுடி தீண்ட வளர்ந்தபிரான்—ஆன தவம்
நம்புருஷ நாரா யணப்பேரே ரிச்சிறப்புந்
தும்பிநின் றுலாவியபூஞ் சோலையும்—பைம்புனல்சேர்
[1]காலடியி லாற்றின் கவர்த்தலையிற் பொன்விளையச்
சாலி விளையுந் தடம்பணையும்—மேலான
சித்திர கோபுரமுஞ் சேர்ந்ததென்னஞ் சோலைகளும்
வர்த்தனையாந் தென்குறுங்கை மாநகரான்—இத்தரையி
முத்தொழிற்கு மூவுருவாய் மூலநடு வீருகி [ல்
வித்தகஞ்செய் பேரின்ப வீட்டினான்— [2]அத்திபடி
மீனுமை பன்றியரி மிக்க குறள்பரசுக்
கோன்வார் சிலைராமன் கூன்கலப்பை—தானே
விசயமெல் ராமன் விளங்கு கிட்ண மாவாந்
தெசவவதா ரம்புரியுந் தேவன்—உசிதமறைக்
காரணத்தா னூர்க்குமடங் காரணத்தா னேந்தியகை
வாரணத்தான் காத்தருள்கை வாரணத்தான்—கார்வரை
ஆகத்தான் பூமகள்சே ராகத்தா னன்றெடுத்த [போல்
நாகத்தான் பள்ளிகொண்ட நாகத்தான்—கோகனக
வுந்தியா னீள்சகட வுந்தியான் கன்றெறிந்த
வந்தியான் தாரணிசெவ் வந்தியான்—சிந்தியார்
உண்ணத்தான் பார்முழுது முண்ணத்தான் நீண்டகடல்
வண்ணத்தான் வாமகர வண்ணத்தான்—எண்ணுமன்
வாரத்தான் முன்பாரா வாரத்தான் அஞ்சவெய்த[பால்
தீரத்தான் சிந்துநதி தீரத்தான்—பாரிரந்த
வாமத்தான் சங்கரன்சேர் வாமத்தான் ஆயிரமா
நாமத்தான் கஸ்தூரி நாமத்தான்—கோமளப்பால்
வேலையான் முத்தொழில்செய் வேலையா [3]னெல்லமைத்
மாலையான் பூந்துளப மாலையான்—ஞாலத் [த
திடர்செய் கனக னெதிர வவன்றன்
குடாலங்க லாயணிந்த கொண்டல்— [4]கடல்சார்

---

(பி-ம்)— [1]காலடியி விராற்றினக். [2]அத்தியடி. [3]னெல் வளர்த்த. [4]கடலரசர்.

70. அலகில் தரணி யடியி [1]லடைய
மலரு மிருதாள் மலரான்—குலவுநெறி
நின்று முனிவர் நெருங்கித் தவம்புரியு
மன்றல் மயேந்திர மால்வரையும்—நன்றுதருஞ்
சிந்து நதியுந் திருப்பாற் கடல்வளமும்
நந்துதவழ் வைகுந்த நன்னாடும்—முந்துங்
குறுங்கா புரியுங் குலவுபுது வாச
மருங்கா துளப மலரும்—நெருங்கும்
கருட துவசமுங் கைமதங்கள் சிந்த
மருடருநாற் கோட்டுமத மாவும்—தரணியிலே
75. வென்றி தருங்கவன மேவு துரகதமும்
மன்றலொலி மாறு மணிமுரசுந்—துன்று
மருவு தசாங்கமென வாழ்வோன் சிறந்த
உருவு தசாங்க முடையோன்—அருமறைதேர்
அயயன் குழகன் அழகிய நம்பியலர்
கொய்யுந் துளபக் குறுங்குடிமால்—பையா
டராவணை வாசன் அறிவி லரிய
பிரானெனை யாளும் பெருமாள்—விராவுமலை
நம்பிதிருப் பாற்கடலில் நம்பிபள்ளி கொண்டருளும்
நம்பி யிருந்தநம்பி நானிலத்தில்—உம்பர்தொழ
80. நின்றகரு மேகம்போல் நீண்டபொன் மேனிநம்பி
வென்றிபுனை நாத வினோதநம்பி—என்றும்
தரணிபுக ழாபற் சகாயநம்பி செம்பொன்
மருவிய செங்கனிவாய் நம்பி—கருணை
பரவுதய மார்த்தாண்டப் பந்தற்கீ ழுண்மை
வருராம தேவமக ராசன்—தருபீடத்
துற்பனமாய்ப் பூமகளும் [2]ஓங்கு நிலமகளும்
விற்பனமாய் நீங்காத மேன்மையான்—அற்புதமாம்
நங்கை யெனையாளும் நம்பிக்கு நாச்சியார்
மங்கை குறுங்குடி வல்லியார்—பங்கிலே
85. சீராக வீற்றிருக்கச் சித்த மகிழ்ந்துதிரு
வாரா தனங்கொண் டருளுநாள்—பாரோர்

(பி - ம்)— [1]லடையு. [2]ஓங்க.

பரவு திருப்பங் குனித்திருவி ழாவிற்
கருட துவசமேற் கட்டிச்—சுருதிமுறை
கேட்டு முதற்றிருநாள் [1]கேடகத்தி ரண்டாம்நாள்
தீட்டு திறல்விசைய சிங்கத்துஞ்—சூட்டுநாள்
மூன்றி லனுமார் முதுபுயத்தும் நாலாம்நாள்
நான்றமுடி யைந்தலை நாகத்துந்—தோன்றிவரும்
அஞ்சாம்நா ளிற்கருட னம்புயத்தும் ஆறும்நாள்
எஞ்சாத வானையினும் ஏழாம்நாள்—மிஞ்சவே
90. வேண்டியபள் ளிச்சிவியார் மேவு சிவிகையினுங்
கூண்டவெட்டாம் நாளிற் குதிரையினும்—பூண்டுங்
குலவொன்ப தாம்நாள் குருந்தேறி வீதி
வலம்வந்து பத்தாம்நாள் வானில்—அலருதைய
காலத்தில் நித்யல்படிக் கட்டளையாந் [2]தாரையுட்ணஞ்
சீலத் துடனமுது செய்தபின்பு—பாலாழிச்
சீரார் திருமஞ் சனஞ்செய்து வாய்த்ததிரு
வாரா தனங்கொண் டருளியே—நேராய்
இசைந்தமணி ரத்னாபி ஷேகத்துக் கேற்க
அசைந்த குழைக்கா தழகும்—பசுந்துளபத்
95. தாருங் கவுஸ்துவமுஞ் சங்குசக்ரக் [3]கையுமியல்
தேருங்கஸ்த் தூரித் திருநுதலும்—காரில்மின்போற்
பீதாம் பரமும் பிறவிப் பிணியறுக்கும்
பாதாம் புயமும் பலபணியுஞ்—சோதிதரு
மாணிக்க மாலை வயிரவொளி யுஞ்சூழ்ந்த
[4]காணிற்பொன் பூத்ததொரு கார்வரைபோல்—பூணிலக
பூவுலகும் பாதலமும் பொன்னகரத் திந்த்ரன்முதல் [ப்
தேவர் முனிவர் செயசெயென—மேவரிய
காளமுதற் பல்லியமுங் கார்முழக்க மென்னவண்ட
கோளமட்டும் நின்று குமிறவே—ஆழ்வார்கள்
100. பன்னிருவ ரோதியப்ர பந்தமும் நான்மறையும்
முன்னம் மறையோர் மொழிந்துசெல்ல—உன்னரிய

---

(பி - ம்)— [1]கேடகத்து மிரண்டாநாள். [2]தாரையுட்டிணஞ். [3]கையுமேல். [4]காணிப்பொன்; காணிற்பொன்.

பேரருளா ளச்சியர் பேராம் வயிணவர்கள்
சார்வுறுதா னத்தார் தலத்தார்கள்—வாரமுறுங்
கோயில் வளரனைத்துக் கொத்தும் புடைசூழ
ஏயதிருத் தேரி லெழுந்தருளி—நாயகனார்
சீலப் பவனிவரச் சேனையர்கோ னின்றுதிரு
வோலக்கஞ் சேவித் துடன்போத—மேலான

## குழாங்கள்

காத லரம்பையருங் காகோ தரநாட்டு
மாதரும்பர் மங்கையரும் வந்திண்டிச்—சீதக்
களமுங் கவானுங் கனதனமேற் றுய்யில்
வளமும் விழியும் வதனத்—தழகும்
கமுகு கதலி கரும்பிளநீர் வாசங்
குமுகுமெனுங் காவிகஞ்சங் கொண்டே—சமுகமாய்
வீதி வளமைசெய்யு மேன்மைபோ லேநெருங்கி
நீதி யிருமருங்கும் [1]நின்றேற்றி—மாதரீர்
வாரீர் பவனிதொழ வாரீ ரிவரழகைப்
பாரீர் எனவே பகருவார்— [2]தார்குழலீர்
முன்னானை காத்தார் முலையானைக் கன்புசெய்யார்
என்னு மிவர்நீதி யென்றுசொல்வார்—நன்னுதலீர்
நாடறிய வேமுன் நரசிங்க மாயானைக்
கோடுபிளந் தாரென்று கூறுவார்—ஆடைதனை
அன்றொருத்திக் கீந்த தவராகி மாதர்கலை
இன்றுகொள்வ தேதென் றியம்புவார்—நன்றுநன்று
கூடுகின்ற கோபியர்தங் கூறைகவர்ந் தேதுளபஞ்
சூடுகின்றார்க் குள்ள தொழிலிதென்பார்—ஆடல்மதன்
வாதை பொறாமல் வளைசோர்வார் வார்சோர்வார் [ர்
கோதைமலர் சோர்வார் குழாத்தொருத்தி—பேதைய

## பேதை

காலம்வரு மட்டுங் கரைகடவா வேலைபோல்
வேலைவிடம் போலும் விழியினாள்—மாலை

(பி - ம்)— [1]நின்றேத்தி? [2]கார்குழலீர்.

115. வனைகுழலார் தமமுட்டின வண்டலயர் போதில்
எனையடிமை கொண்டநம்பி ராயர்—புனைதேர்ப்
பவனிதொழுந் தாயரைப்பின் பற்றிநடந் தோடி
யவர்கள்சொன்ன வண்ணமுரைத் தன்னே—இவர்மெய்
மாலை தனைவாங்கும் வண்டல்மக வுக்கெனவே [யில்
சேலைநிகர் கட்கடைநீர் சிந்தினாள்—ஆலை
மதன்பைங் கழைகுழையான் வார்கணையும் பூட்டான்
விதஞ்செய்மறு வீதிபோம் வேளை—பெதும்பைரத்ன

பெதும்பை

வார்புனையு முத்து வடம்புனையச் சிந்தையருள்
[1]கூரவடிக் கொண்டரும்புங் கொங்கையாள்—ஆர்வமுடன்
120. வெற்றிசெய்யுங் [2]காமா விகாரங் கொழுந்துவிட்டுப்
பற்றிப் படரும் பருவத்தாள்—பொற்றொடியார்
கூடுங் கலவி குறித்தெழுதுஞ் சித்திரத்தை
மேடையிற்போய்ப் பார்த்துநிற்கும் வேளைதனில்—சூ
மருத்தேர் குழற்பாங்கி வந்துநம்பி ராயன் [டும்
திருத்தேர்ப் பவனியென்று செப்பக்—கருத்துருகி
மாதருடன் வந்து வணங்கிநம்பி ராயன்மேல்
காத லரும்பவிழுங் காட்சிபோல்— [3]ஒதிர்
மருக்குலவு மார்பிலொரு மாதல்லால் தோள்மேல்
இருக்குமிவ ளாரொருத்தி யென்றாள்—விரைக்குழலார்
125. பூவில்வளர் மாது புவிமா திருவரிவற்
காவசிய மென்ப [4]தறியாயோ—பாவாய்
எனவுரைத்த போதில் இணைவிழியால் நோக்கி
மனமுருகி னாள்பின் மறந்தாள்—பனிமதியைக்
காண விளகுசந்த்ர காந்தமொத்தாள் மாரன்வர்மம்
பூணவயல் வீதிப் புறம்போந்தாள்—வாணுதலாள்

மங்கை

மங்கை யொருத்தி மதனபி ஷேகமிரு
கொங்கைமயில் காமக் குலதெய்வம்—இங்கிதமாஞ்

---

(பி - ம்)— [1]கூர்வடிக். [2]காம? [3]ஆதீர். [4]தறியாயே.

சீரார் துணைவிநம்பி தேர்ப்பவனி பார்க்கமின்னே
வாரா யெனவே மகிழ்ந்துபோய்—நேராய்ப்
130. பணிந்தே மயலாய்ப் பரிபவங்க ளெல்லாந்
துணிந்தே யெதிராடிச் சொன்னாள்—மணந்தருளிச்
செய்யவிருந் தாவனத்திற் சென்றொருத்திக் காகநீர்
மையல்கொண்ட செய்தி மறந்தீரோ—பொய்யலவே
மோகம் பொறுமலொரு மொய்குழலுக் கும்மைப்போல்
ஆகங் கொடுத்தார்கள் ஆர்சொல்வீர்—சோகமாய்ப்
பேராசை [1]யானும் பெண்ணென்றே பூந்துளபத்
தாராசை தீரவே தாருமென்று—தேரிற்
றொடர்ந்தாள்வே ளம்பு சொரியவயல் வீதி
நடந்தார்பொற் றேருடனே நம்பி—மடந்தை

### மடந்தை

135. வடுவும் பிணையும் வளர்சேலும் வேலும்
கடுவுமமு துங்கலந்த கண்ணாள்—நடுவாம்
எழுபருவத் துள்ளு மிவள்பருவ மென்று
தொழுதுமதன் போற்றுந் துரைப்பெண்—அழகான
பொன்னூச லாடும் பொழுது குழையிரண்டும்
மின்னூச லாட விறலிபோய்—உன்னழகு
நன்றென்று கொண்டாடி நம்பிதிருத் தேர்ப்பவனி
யின்றென்றாள் சென்றா ளிறைஞ்சினாள்—நின்றுருகிச்
செங்கனகத் தேர்விருப்பஞ் செய்தீர் மயலான
வெங்களல்குற் றேருமக் கேலாதோ—பைங்கமலக்
140. கைச்சங்கங் கொண்டீர் கருத்தில் விரும்புமெங்கள்
மெய்ச்சங்கம் நீர்விரும்ப வேண்டாவோ—நச்சரவம்
ஏறுபுள்ளோ டின்புற் றிருந்ததுபோ லெங்கள்மேற்
சீறுமதி நட்பாச்சோ தீண்டாதோ—கூறீர்
எனுமுன்மத னெய்தான் இருகாலி [2]விட்டாள்
மனுவையல்கு லேந்தினாள் வாரைத்—தனமேற்
கரிய குழல்மறைப்பக் காதல்கொண்டாள் மற்றோர்
தெருவில் மதனொடுதேர் செல்ல—அரிவை

(பி - ம்)— [1]யாய்கானும். [2]விட்டான்.

## அரிவை

இலவுகுமிழ் முல்லை யிதழ்க்குவளை வள்ளை
மலருமொரு தாமரையில் வாய்ப்பக்—கலவியிலே
மேனகையுங் கொல்விமலை மேனகைசெய் தாளும்வெட
தானகைசெய் [1]காமசுர தானியாம்—மானனையாள் [கத்
பாங்கினாற் செம்பொற் [2]படாமும் வளைகோலும்
வாங்கினாள் நம்பி வடிவெழுத—ஓங்குபொற்றேர்
மன்னுங் குறுங்கைநம்பி வந்தார்வந் தாரென்று [த்தி
சின்னத் தொனிகேட்பச் சென்றிறைஞ்சி—முன்னொரு
[3]மெய்க்கரும்பி னாசையால் வில்லொடித்தீர் போர்மாரன்
கைக்கரும்பை வில்லைசெய்யக் காணேனான்—மைக்கடலி
வீறடைத்து மேவுமணை மீதுசென்றீர் என்னிருகண் [ன்
னாறடைத்து மேவு மணைகாணீர்—மாறுபடும்
புள்வாய் கிழித்தநீர் பூங்குயிலோ டன்றிலெனும்
புள்வாய் கிழிக்கவின்று போகாதோ—உள்ளம்
பரிபவமென் றுள்கடைக்கண் பாலித்து மற்றோர்
தெருவில் மதனொடுதேர் செல்லத்—தெரிவை

## தெரிவை

நிலவுமுடித் தோன்முடிக்க நீறுபட்ட காமன்
இலகுமுயிர் பெற்றுலக மெங்குஞ்—சிலையேந்திச்
சென்றுபோர் வென்று செயஸ்தம்பம் நாட்டியே
நின்றநாள் தேடுகின்ற நிட்சேபந்—துன்றுமலர்
வாவிப் புனலாடி மாதருடன் தேர்ப்பவனி
சேவித்தாள் நம்பி திருமுன்போய்—மேவீர்
வளையாழி கைக்கிருக்க மையலா மெங்கள்
வளையாழி கொள்ள வழக்கோ—இளையார்கள்
காணவளைத் தாளிவளைக் கைக்கொளவே நல்கீரேல்
பூணமலர்த் தாரளித்தாற் போதுமே—வாணுதலார்
ஆந்தரங்க மாமிருவர்க் காட்சிபுய மார்பல்லாற்
பூந்துளப மார்க்கும் பொதுவன்றோ—பூந்துளபத்

---

(பி - ம்)— [1]காம சுரதனியாம். [2]பரமும் வளை கோலும். [3]மெய்க் கரும்பு மாசையால்.

[1]தாரே தரீரேற் றருந்தகா தென்பதொன்றும்
பாரேன்கை [2]தொட்டும் பறிப்பேனுன்—சேருமென்று
புன்முறுவல் செய்துநம்பி [3]போனு ரயல்வீதி [ள்
மன்மதனும் நின்று வளைக்கின்றான்—கன்னற்
றனுவிற் சரந்தொடுத்தான் [4]தையலின்மெய் யென்னத்
தனுவிற் [5]சரக்கூட தானுள்—வனிதையப்பாற்

## பேரிளம்பெண்

காரார் கருங்கூந்தற் செங்கனிவாய் வெண்முறுவற்
பேரான சிற்றிடைசேர் பேரிளம்பெண்—மாரனுக்கு
வீறுதரு விற்றொழிலு மிக்ககலைக் கியானமுமே
[6]கூறவருந் தீட்சா குருபீடம்—தேறிமறை
தேடுகின்ற நம்பி திருப்பதிநூற் றெட்டிலொன்று
பாடகமென் றேயணியாப் பாதத்தாள்—நாடரிய
எங்கள்நம்பிக் கொப்பாக யான்வளையே னென்றிகழ்ந்து
சங்கவளை பூட்டாத் தடக்கையாள்—அங்கொருத்தி
மாலுக்கு மாலானுள் மாற்றவள்பே ரென்றுசொல்லிக்
கோலத் திருவணியாக் கூந்தலாள்—மேலுலகத்
தோரைவென்று தானே உபயசொர்க்க மாய்ச்சினந்து
பாரைவெல்லப் பார்க்கும் பயோதரத்தாள்—நேரான
சீதம்வளர் வச்ரச் சிலாதலத்தி லேபகவற்
கீதைபிர சங்கிக்கக் கேட்டிருக்கும்—போது
விரும்பவனி போற்றுநம்பி மேவுதிருத் தேரில்
வரும்பவனி சேவிக்க வந்தாள்—கரும்புயல்போல்
நீண்டபொன் மேனிநம்பி நின்ற வடிவழகைக்
காண்டலுமே மட்டமிஞ்சுங் காதலாய்—வேண்டுகின்று
சந்ததமும் [7]நீர்விரும்புஞ் சந்திரபா கைக்குதவும் [ள்
ஐந்தருவந் தானு மதுகொள்ளேன்—சிந்தா
மணிமகத்வ மார்புமது மார்புக் கணியாய்
அணிகவுத்வ மீதுமில்லை யாசை—பணிவோர்க்குச்

---

(பி - ம்)— 1தாரோதீ ரீரோற். 2தொட்டுப். 3போனர் பல வீதி. 4 தையலும் மெய். 5சரக்கூடத். 6கூறுவரு. 7நீயிருப்பச்.

[1]சாந்தணியு மார்பிற் சவாது மணம்வீசும்
பூந்துளப மாலைதந்தாற் போதுமே—ஈந்தருள்வீர்
என்றா ளிதுசமய மென்றுமதன் வில்வளைத்தான் [ரச்
வென்றா ளினியெனவே மெய்தளர்ந்தாள்—தென்றல்வ
சாலகங்கள் தாழ்திறந்தார் தாரையுட்ண சாந்திகள்மென்
மேலுமமைத் தார்தளிரால் மெத்தையிட்டார்—ஆலவட்
175. வீசினார் மல்லிகைவி தானித்தார் சாந்துபன்னீர் [டம்
பூசினார் நேர்ந்தாரப் போதொருத்தி—நேசமுள்ள
மூதறிவாம் பாங்கிவந்து மொய்குழலா ளைவிலக்கிக்
காத லொருவர் கருத்தறியீர்—வேதனையே
செய்தீர் இவட்கிதங்கள் செய்வதுபோ லேயிடர்கள்
செய்தீர் இனியென்ன செய்குவீர்—வெய்துயிர்க்க
வார்த்தபன்னீர் நம்பி மகிழுந் திருப்படிக்கத்
தீர்த்தநிக ராகுமோ செப்புவீர்—போர்த்த
குளிரு முலைமேற் குறுங்கேச நம்பி
துளபநிக ராகுமோ சொல்வீர்—குளிர்மையென்றீர்
180. ஏந்து களபநம்பி யிட்டபட்ட வர்த்தனம்போல்
போந்தமயல் போக்கவிது புத்தியோ—சாந்தாற்றி
வட்ட விசிறிநம்பி வாழ்கோ புரவாச
விட்டமுள்ள தென்றலொப்போ வீதெல்லாம்—விட்டு
என்றுபோய் நம்பிக் கிதமுரைத்து வாங்கிவந்து [விடீர்
மன்றல்மலர் சூட்ட மனமகிழ்ந்தாள்—நின்றுகிளி
பேசுகின்ற தென்னவரும் பேதைமுதற் பேரிளம்பெண்
ணாசைகொண்டு போற்ற வருள்செய்தே—தேசமகிழ்
184. நம்பிகுறுங் காபுரியில் நாத வினோதநம்பி
யும்பர்தொழப் போந்தான் உலா.

அழகியநம்பி யுலா

முற்றும்.

(பி - ம்)— [1]சாந்தனிவர் மீது.

# அனுபந்தம்

82. ‘பரவுதய மார்த்தாண்டப் பந்தற்கீ ழுண்மை
வருராம தேவமக ராசன்—தருபீடத்து’

என்று இவ்வுலாவில் வரும் அடிகள் சரித்திரத் தொடர்புடையன. ‘**உதயமார்த்தாண்டர்** என்ற அரசர் தம்பெயாற் சமர்ப்பித்த பந்தலின் கீழாக **இராமதேவர்** என்ற அரசர் தம்பெயரால் அமைத்தளித்த பீடத்திலே’ என்பது பொருள். கொல்லம் ஆண்டு 630-ல் (கி. பி. 1455) எழுதப்பெற்ற தாமிரசாஸன மொன்றிலும் நாட்டாற்றுப் போக்கு வைகுண்ட வளநாட்டுத் திருக்குறுங்குடியில் உதயமார்த்தாண்டப் பந்தலின்கீழ்ப் புஜபல வீரசௌந்தர ராமவர்மன் பீடத்தில் சுவாமி அழகியநம்பி எழுந்தருளியிருந்ததாகக் காணப்படுகின்றது. (**Rangacharya's I. M. P. vol. iii. p. 1472, no. 285**). இங்கே கூறப்பெற்ற உதயமார்த்தாண்டர் சேர - உதயமார்த்தாண்டவர்மராக இருத்தல்வேண்டும். ஏனெனின், இவரே திருநெல்வேலிக்குத் தெற்கிலுள்ள நாட்டுப்பகுதியை வென்றடிப்படுத்து வள்ளியூரிலும், சேரன் மாதேவியிலும் அடிக்கடிதங்கி வசித்துவந்தார். இவருக்குமுன் ‘உதயமார்த்தாண்டர்’ என்ற பெயருடையாராக இருவர் திருவிதாங்கோட்டுச் சரித்திரத்திற் காணப்படினும், இவ்விருவருக்கும் திருக்குறுங்குடிப் பிரதேசத்திற்கும் யாதோரியையும் இருந்ததாகத் தெரியவில்லை. இவர் தமது 16-வது ஆண்டில் பட்டத்திற்கு வந்தார்; 78-வது ஆண்டில், கொல்லம் 619-ம் வருடத்தில், தேகவியோகமாயினர். (திருவிதாங்கூர் ஸ்டேட்மானுவல், முதல்வால்யம், பக். 267). ஆகவே, கி. பி. 15-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உதயமார்த்தாண்டப் பந்தல் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். அழகியநம்பி கோயிலிலுள்ள மணியின் மேற்புறத்தில்,

‘செயதுங்க நாட்டுச் சிறைவாய்மன் னாதித்தன் தென்வஞ்சியான்
வியலொன் றகில கலையாளன் கன்னி விசாகம்வந்தோன்
நயமொன்று கொல்ல மறுநூற்று நாற்பத்து நாலினன்பால்
அயனும் பணிய மணியளித் தானம்பிக் கன்புகொண்டே

என்ற செய்யுள் பொறிக்கப்பட்டுள்ளது. இதனால் திருவிதாங்கோட்டு அரசர்கள் பலர் திருக்குறுங்குடி சுவாமி அழகிய நம்பியின் பக்தர்களாய் விளங்கினர் என்பது உணரலாம்.

இப்பந்தரின்கீழுள்ள பீடத்தை இயற்றியவர் இன்னாரென அறிந்துகொள்வது எளிதன்று. ராமவர்மன் என்ற ஓர் அரசர் கொல்லம் 646 முதல் 659 வரை அரசு புரிந்தவரெனச் சிலாசாஸன ஆராய்ச்சியாற் புலனாகின்றது. இவ்வரசர் கொல்லம் 646 - லும், 654-லும் சாஸனங்கள் செய்திருக்கின்றார். இவர் அரசராவதற்குமுன் தமது மூத்த சகோதரர் ஆதித்திய வர்மரின் பிரதிநிதியாகப் பல விடங்களில் ஆட்சி புரிந்திருக்கிறார். இவருக்குச் 'செண்பகராமன்' என்ற பட்டப்பெயரும் உளதாகத் தெரிகிறது. செண்பகராமச் சதுர்வேதி மங்கலம் எனவொன்று திருக்குறுங்குடியில் கொல்லம் 646-ல் இருந்ததென்பதும், செண்பகராம மண்டபம் எனவொன்று திருநெல்வேலியில் கொல்லம் 653-ல் இருந்ததென்பதும் சாஸனங்களால் அறியலாவன. 'புஜபல வீர சௌந்தர ராமவர்மன்' என்பதும் இவரது பெயராகவே கருதத்தக்கது. நூலிற் குறிக்கப்பெற்றது சாஸனத்திற் காணும் புஜபல வீரசௌந்தர ராமவர்மன் பீடமாக இருத்தல்கூடும். இவ்வூகம் சரியாயின், உத்தேசம் கி. பி. 1450-ல் இப்பீடம் அமைக்கப்பெற்றதாகலாம். ஆனால் நூலில் வந்துள்ள தொடர் இம்முடிபை அத்துணை ஆதரிப்பதாகத் தோன்றவில்லை. 'ராமதேவ மகராசன்' என்றே அது கூறுகின்றது. கொல்லம் 768-ல் உதய மார்த்தாண்டப்பந்தரின் கீழ்ப் புஜபல வீரவசந்த வேங்கடதேவ மகாராஜர் பீடத்தில் சுவாமி அழகிய நம்பி வீற்றிருந்ததாக வேறொரு தாமிரசாஸனம் தெரிவிக்கின்றது. (I. M. P. iii. p. 1472, no. 286). இங்கே குறித்த வேங்கடதேவ மகாராஜர் விஜயநகரத்தரசர்களுள் ஒருவர். இவரைப்போன்று, ராமதேவ மகராசனும் விஜயநகரத்தரசரில் ஒருவராயிருத்தல் மிகப் பொருத்தமானதாகும். இஃது உண்மையாயின், இவர் மேற்குறித்த வேங்கடதேவ மகாராஜாவின் பின் கி. பி. 619 முதல் 630 வரை அரசு புரிந்த ராமதேவ மகாராஜாவாக இருத்தல்வேண்டும். சாலிவாகன சகாப்தம் 1551-ல் பொறிக்கப்பட்ட சாஸனமொன்றில் 'ராஜாதி ராஜ ராஜ பரமேஶ்வர ராமதேவ மஹாராயர்' என்று இவர் குறிக்கப்படுகிறார். (S. I. I. v. no. 291). எனவே, இப்பீடந் தோன்றியது இவரது காலமாகிய கி. பி. 17-வது நூற்றாண்டின் தொடக்கமாதல்வேண்டும்.

பீடம் அமைத்ததைக் குறிக்குந் தொடர் அத்திருப்பணி நிகழ்ந்த காலத்தில் இருந்தாரொருவரது கூற்றுப்போலத் தோன்றுகிறது. ஆதலால் இந்நூல் இயற்றப்பெற்ற காலமும் 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியே யாதல் வேண்டும்.